கீழ்க்கண்ட நிகழ்ச்சிநிரலை நேர்த்தியாக தட்டச்சு செய்து நாற்புரமும் கோடிடுக:–



4. கடிதங்கள்/அரசு ஆணைகள் (Letters/Government Orders)

4. (அ) நேர்முகக் கடிதம் (**Demi Official Letter**) மாதிரிப்படிவம்

தமிழ்நாடு அரசு

வருவாய்த் துறை

த. ஆடலரசு, இ.அ.ப.,
அரசுச் செயலாளர்.

புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை 600 009.

நே.மு.க.எ.ண 980/72–1

நாள் 20 செப்டம்பர் 1972.

அன்புள்ள திரு. அருள் அவர்களுக்கு,

பொருள் : வெள்ளமும் சேதமும் – நிவாரணம் குறித்து.

பார்வை : தங்கள் கடித எண் 85/72, நாள் 10 செப்டம்பர் 1972.

******

அண்மையில் பெய்த பெரு மழையினால் வெள்ளம் ஏற்பட்டு, அதனால் தஞ்சை மாவட்டத்தின் பல இடங்களில் மிகுந்த சேதம் விளைந்திருக்கிறது என்பதைத் தங்களுடைய கடிதத்தின் மூலமாகத் தெரிவித்துள்ளீர்கள். இதுபோன்ற தகவல்கள் பல மாவட்டங்களிலிருந்து அரசுக்கு வந்தவண்ணமாக இருக்கின்றன. உடனடியாகச் செய்யவேண்டிய நிவாரணப் பணிகளுக்காகத் தங்கள் மாவட்டத்திற்கு ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) அரசு ஒதுக்கியுள்ளது.

மேலும் எந்த வகையில் நிவாரணம் தேவை என்று தெரிவித்தால், உதவித் தொகை அளிப்பதுபற்றி அரசு பரிசீலிக்க இயலும்.

தங்கள் அன்புள்ள,

(த. ஆடலரசு)

பெறுநர்
திரு.ஆ. அருண், இ.அ.ப.,
மாவட்ட ஆட்சியர்.
தஞ்சாவூர் 613 001.

கீழ்க்கண்ட நேர்முகக் கடிதத்தை தக்க முறையில் தட்டச்சு செய்க:—

த. நா. அரசு

ஒருவழக்குரைஞர்

அ. அப்பிரமணியம், பி. ஏ. ப.,
ஆணையர் மற்றும் அரசுச் செயலர்.

புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை 600 009.
நாள் 5 செப்டம்பர் 1986.

2/ ந. மு. க. எண் 1986/86-2

திரு. / அன்புள்ள / திருமதி / திருவாளர் அவர்களுக்கு,

பொ. : வறட்சி நிவாரணம் குறித்து — கலை
விவரங்கள் அனுப்புதல் —
சம்பந்தமாக.

பா. : இச்செயலகக் கடிதம் எண் 1986/86-1,
நாள் 6 ஜூன் 1986. அக.

பார்வையில் கண்ட கடிதத்தில் வறட்சி பார.
வடமாநில மாவட்டத்தில் / நிலைகுறித்த
/ அறிக்கை உடனடியாக அனுப்பப்பட
வேண்டுமென்று கேட்கப்பட்டது. ஆயினும்,
நிலவரங்களை விளக்கி விவர மா.
அது வரப் பெறவில்லை என்பதை வருத்த
/ துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
வறட்சி நிவாரண நடவடிக்கைகள்
போர்க்கால அடிப்படையில் எடுக்க
வேண்டும் என்றும், / இதற்குத் தேவையான பார.
பணத்தை / நிருக்கு விரைவில்
ஒதுக்கீடு அளிப்ப

நிதி கோரி மத்திய அரசுக்கு
20 செப்.1986-க்குள் கடிதம் ~~அனுப்ப~~ திருத்த
வேண்டுமெனவும் ஆணையிட்டுள்ளார்.

இந்தத் தகவல் முழுமை பெறாமல்
உள்ளது. அது மட்டுமல்லாமல், வறட்சி
நிவாரணப் ~~பணிகளை~~ தொடங்கி வைப்பதிலும்

2 விருந்து வரப்பெறாமையில், மத்திய
அரசுக்கு அனுப்ப வேண்டிய ~~அறிக்கை~~ திருத்த
காலதாமதம் ஏற்படுகிறது. அதனால், ஏற்கனவே
கோரப்பட்ட உடனடியாக விவரக்கினை
2 1
அனுப்பி வைக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
(அ. சாம்பசிவமணியம்)

பெறுநர்
திரு. சு. இளங்கோவன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
சேலம்.

(632 001.)

மா.

மா.

மா.

கீழ்க்கண்ட கோரிக்கை கடிதத்தைத் தக்கமுறையில் நடவடிக்கை செய்க:-

தி. நா. அரசு
கல்வித் துறை

அ. அடைக்கண்ணன், கி.ஆ.ப.,
ஆணையாளர் மற்றும் அரசுச் செயலாளர்,
கோ மு.க. எண் 3976/87-3

புனித ஜோசப் கோட்டை கோச்சி மா
சென்னை 600 009.
நாள் 15ஏப். 1987.

ஐ அன்புள்ள திருவல்லி அவர்களுக்கு,

பார்வை: இச் செயலகக் கடிதம் எண் 3976/87-2, நாள் 28 மே. 1987.

பொருள்: புதிய உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பத்தில் - விவரங்கள் அனுப்புதல் சம்பந்தமாக

மா.

தக

பார்வையில் கண்ட கடிதத்தில், வருகிற கல்வியாண்டில் திருநாகல்வேலி - கட்டபொம்மன், இராமநாதபுரம் முன்றும் மாவட்டங்களில் காமராசரி பணியை புதிய உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கவும் தற்போது நடந்துவரும் இடைநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக்கவும் யந்திரனி விண்ணப்பங்கள் பற்றிய விவரங்கள் மே மாதம் 10-ஆம் தேதிக்குள் அரசுக்கு வந்து சேர வேண்டுமென்று பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அதற்கு இன்றுவரையில் பதில் இல்லை.

//அ.ப. //கல்வி சம்பந்தப்பட்ட முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் தனியே இச் செயற்குறிப்பு வரைந்து, உடனடியாக அரசு மட்டத்தில் பரிசீலித்து முடிவெடுக்க வேண்டுகிறேன்.

தொடரும்.

எண்ணியன்னதுன் பள்ளிக் கல்வி இயக்கினுடைய
பரிந்துரையுடன் கூடிய மேற்கண்ட
விண்ணப்பங்களை இம்மாதம் 21-ஆம் தேதி
பிற்பகல் 12 மணிக்குள் அரசுக்குக் கிடைக்கும்
வகையில் தலைமைச் அனுப்பி வைக்கக் கேட்டுக்
கொள்கிறேன்.

மேலும், திருத்தம் கிடைக்கப்பெற்றமை
~~தெரிந்து~~ உடனடியாக ஆய்வுச் செய்தல் தொடர்பான
அனுப்புமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

(அ. சுப்பிரமணியன்)

பெறுநர்

செயலாளர்,
பள்ளிக் கல்வி இயக்ககம்,
சென்னை 600 006.

கல்வி வளாகம்

கீழ்க்கண்ட கோரிக்கையை உரிய முறையில் தட்டச்சு செய்க:-

மு.

ப. ரெஜுலேகோபால், கி.ஆ.ப.,
அரசு கூடுதல் செயலாளர்.

தமிழ்நாடு அரசு
தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறை

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை 600 009.

கொண்டல் வினைத்தொகை யும், தருத்துணை யும், இலுப்பணை வினையும் வழுவு மாறு

கே.தி.க. எண் 4953/95-12 நாள். 10 ஆக. 1995.

அன்புள்ள திரு. சந்தானம் அவர்களுக்கு,

பொருள்: பேட்டம் - எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுத் தொலைக் காணக்குகள் சிறப்புத் தணிக்கை தொடர்பாக தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலாளர் தலைமையில் 18 செப். 1995

செவ்வாயன்று பிற்பகல் 10.30 மணியளவில் சிறப்பு கூட்டம்

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுத் தொலைக் காணக்குகள் தொடர்பாக, தணிக்கை சிறப்புத் தணிக்கை

மு. நாளன்றுக்கு முதல் நாள்

கூட்டம்/ நடப்பு

திரு. கிரா. கிருத்துதாசு காந்தி, கி.ஆ.ப. அவர்கள் தலைமையில் 12 செப்டம்பர் 1995 செவ்வாய்க்கிழமை அன்று பிற்பகல் 10.30 மணிக்கு தலைமைச் செயலக ஆறாம் தளத்திலுள்ள தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலாளர் அறையில் சிறப்புக் கூட்டம் நடைபெறவுள்ளது. // இப்பொருண்மை தொடர்பான அனைத்து விவரங்களுடன் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைமைச் செயலகம்,
செ., 600 009.

மு. அன்புள்ள
(ப. ரெஜுலேகோபால்)

பெறு,
திரு. கு. சந்தானம், கி.ஆ.ப.,
செயலாளர்,
மத்திய கல்வியியல் மன்றம் (NCERT) வளாகம்,

கீழ்க்கண்ட கோரிக்கைக் கடிதத்தை தக்கமுறையில் நடவடிக்கை செய்க:-

தலைமைச் செயலகம்

என். சீனிவாசன், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்,

புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை 600009.

கீழ்க்காணும்

4. (ஆ) அரசு ஆணை **(Government Order)** **வடிவம்**

1 .....

2 .....

3 .....

.....

.....

4.....

5..... 6.....

7.....

8 .....

.....

.....

9 .....

10 .....

.....

.....

.....

11(.....)

12.....

13.....

14.....

.....

15.....

16.....

17.....

1. அரசின் பெயர்
2. 'சுருக்கம்' என்ற சொல்
3. பொருள் விபரம்
4. துறையின் பெயர்
5. அரசு ஆணை எண்
6. அரசு ஆணை பிறப்பிக்கப்பட்ட நாள்
7. 'படிக்கப்பட்டவை' என்ற சொல்
8. படிக்கப்பட்டவை
9. 'ஆணை' என்ற சொல்
10. அரசு ஆணைப் பகுதி
11. 'ஆளுநரின் ஆணைப்படி' என்ற சொற்றொடர்
12. ஆணை பிறப்பிக்கும் அலுவலரின் பெயர்
13. ஆணை பிறப்பிக்கும் அலுவலரின் பதவிப்பெயர்
14. 'பெறுநர்' என்ற சொல்லும் பெறுநரின் பெயரும் முகவரியும் ஆணையின் படியினைப் பெறுபவரின் பெயரும் முகவரிவும்.
15. நகல் படிகள்
16. 'ஆணைப்படி அனுப்பப்படுகிறது' என்ற சொற்றொடர்.
17. 'கண்காணிப்பாளர் / பிரிவு அலுவலர் என்ற சொற்றொடர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

கல்வி – தல நிருவாகப் பள்ளிகள் – உடற்பயிற்சி ஆசிரியர்கள் – ஊதிய விகிதங்களில் மாற்றம் – ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

கல்வித் துறை

அரசு ஆணை எண் 3040 நாள் 3 செப்டம்பர் 1970.

படிக்கப்பட்டவை :

(1) அரசு ஆணை எண் 2832, கல்விஇ நாள் 30 மார்ச் 1968.
(2) தமிழ்நாடு உடற்பயிற்சி ஆரியர்கள் கழகத்தின் 20 டிசம்பர் 1969 நாளிட்ட மனு.

ஆணை :

ஊதியக் குழுவின் பரிந்துரையின்பேரில், தல நிருவாகப் பள்ளிகளில் பணிபுரியும் தொழிற் பயிற்சி ஆசிரியர்களுக்கான ஊதியம் ரூ.200–10–300 என்ற விகிதத்தில் மாற்றியமைக்கப்பட்டது. அவ்விகிதம் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் அளிக்கப்படும் என்று அரசு ஆணையிடுகிறது.

2. இவ்வாணை 1–8–1970 முதல் நடைமுறைக்கு வரும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. குமரவேல்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
கல்வித் துறை இயக்குநர், சென்னை 600 006.
இயக்குநர், விளம்பரத் துறை, சென்னை 600 009.

ஆணைப்படி அனுப்பப்படுகிறது

கண்காணிப்பாளர்.

கீழ்கண்ட அரசு ஆணையை உரிய முறையில் தட்டச்சு செய்க:–

தி. நா. அரசு

சுருக்கம்

அரசுப் பணியாளர்கள் – ஈண்டல் விடுப்பு அளித்தல் – சில கட்டுப்பாடுகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

பணியாளர் நிர்வாகச் சீர்திருத்தத் துறை

அரசு ஆணை எண் 117/4 நாள் : 15 ஏப். 1987.

படிக்கப்பட்டது :

அ. ஆ. எண் 603, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம், நாள் 18 நவ. 1985.

ஆணை :

தற்போது நடைமுறையில் இருக்கின்ற விதிகளின்படி ஐந்தாண்டுகளுக்கு மேல் எந்த அரசுப் பணியாளருக்கும் விடுப்பு அளிக்க முடியாது. அதற்கு மேலும் ஓராண்டு விடுப்பில் இருந்தால், மாநில ஆளுநருக்குச் செய்யும் ~~.....~~ பேரில், அவருக்கு அசாதாரண சூழ்நிலையில் விடுப்பு அளிக்கலாம். இல்லையென்றால் பணியாளர் பணி நீக்கம் செய்யப்படுவார். ~~அதன்~~ விடுப்பு அளிப்பதாக இருந்தால் (விடுப்புக்குத் தகுதி படைத்த) மேல் உள்ள மா. காலத்தை விடுப்பாக இல்லாத அவருக்குப் பணியில் அளிக்கப்படும். 3 2 1

2. இந்த விதியைத் தளர்த்த வேண்டுமென்று பணியாளர்களிடமிருந்து வந்த கோரிக்கைகளை மாநில அரசு, மத்திய அரசைக் கலந்தாலோசித்த

[தொடரும்

கீழ்க்கண்ட அரசு ஆணையை உரிய முறையில் நடைமுறை செய்க:-

த. நா. அரசு

சுருக்கம்

விடுப்பு - தற்செயல் விடுப்பு - ஓர் ஆண்டிற்கான 20 நாட்கள் தற்செயல் விடுப்பினை 12 நாட்களாகக் குறைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

அரசு ஆணைக் கை எண் 563 நாள் 30 மே 1985,

படிக்கப்பட்டவை;

(1) அ. ஆ. எண் 1765, பொது (பல்வகை), நாள் 22 அக்டோபர் 1979.

(2) நாங்கள் அரசுக்கு அனுப்பிய அறிக்கை

ஆணை:

பார்வையில் காண்பின்ற அரசு ஆணையில் அரசுப் பணியாளர்களுக்கு ஓர் ஆண்டிற்கு மொத்தம் விடுப்பு 20 நாட்கள் தற்செயல் விடுப்பு எடுக்க அனுமதிக்கப்பட்டது. நாங்களும் அதற்கு உரிய அறிக்கையில் தெரிவித்திருந்தோம்.

தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள மொத்த தற்செயல் விடுப்பு நாட்களை 12 நாட்களாகக் குறைக்க வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளது. இப்பரிந்துரையை அரசு ஏற்று, மொத்த அனுமதிக்கப்பட்டுள்ள தற்போது செயல் விடுப்பு வரம்பினை ஓர் ஆண்டிற்கு 20 நாட்களிலிருந்து 12 நாட்களாகக் குறைத்து ஆணையிடுகிறது. இவ்வாணை 1.7.1985 முதல் அமலுக்கு வரும்.

2. அடிப்படை விதிகளுக்குத் தக்க திருத்தம் தனியே வெளியிடப்படும்.

(இது மாநிலஸ்தரின் உள்ளது போல, கவர்னரின் ஆணைப்படி)

த. வி. அன்றோணி
அரசுத் தலைமைச் செயலர்,

தலைமைச் செயலகத்துறைகள் அனைத்தும்.
துறைத் தலைவர்கள் க.

ஆணைப்படி அனுப்பி... நீரது

பி. அ.

கீழ்க்கண்ட அரசு ஆணை உரிய நிறைவில் நட்டம் செய்க :-

தி.நா. அரசு
சருகீக்கக

மா/. நிலம் - நிலமற்ற ஏழைகளுக்கு நிலங்கள் (விவசாய) வழங்கல் - நிலமற்ற ஏழ் படைக்கான உருமான மதிப்பு ரூ. 12,000/- என்று உயர்த்தி ஆணையிடப்படுகிறது

உருவாய்த்துறை

அரசு ஆணை (நிலை) எண் 113 நாள் 6.மே. 1997 ஆ6
படிக்கப்பட்டது: ஆவை

(1) அரசு ஆணை (நிலை) எண் 1091, உருவாய், நாள் 31 டிச. 1993.
(2) அ.கு.(நிலை) எண் 248, உருவாய், நாள் 16 மார்ச். 1995

ஆணை:

நிலமற்ற ஏழைக்குடும்பங்களுக்கு நிலம் உருவாயின் அடிப்படையில் இலவசமாக விவசாயத்திற்கு அரசின் நன்செய்நிலம் கிடைத்து உதவுகிறது. பார்வை 1-இல் காண்ட அரசு ஆணையில் ஒரு நெய்ச்சரின் ஆண்டு உருமான மதிப்பு ரூ. 9000/- க்குக் குறைவாக இருந்தால் அத்தகைய நிலமற்ற குடும்பங்களுக்கு விவசாய நிலம் இலவசமாக ஏழ்படை செய்ய ஆணையிடப்பட்டது. // 2. பார்வை 2-இல் காண்ட அரசு ஆணையில் இலவசமாக ஒட்டி மணை ஏழ்படை செய்வதற்கான ஆண்டு உருமான மதிப்பை ரூ. 9,000/- லிருந்து ரூ. 10,000/- ஆக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

மா/ 3 விவசாய அடிப்படையில் 2 அதன் இலவசங்களையும் இலவசமாக ஏழ்படை செய்வதற்கான உருமான மதிப்பை ஆண்டிற்கு ரூ. 9000/- லிருந்து ரூ. 12,000/- ஆக உயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

நிலம் ஏழ்படை செய்வது என்பது

(ஆளுநரின் ஆணைப்படி)

வி.எஸ். பாண்டியன்
அரசுச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மேலட்ட உருவாய் அலு...,
ஆணைப்படி அனுப்ப... பிறகு

வி.அ.

4. (இ) அலுவல்முறை அறிவிக்கை (Official Notification) **படிவம்**

1 .....

//

2 .....

//

3 .....

//

4 .....

.....

5 .....

6 .....

.....

.....

7.....

//

8.....

1. அரசின் பெயர்
2. துறையின் பெயர்
3. 'அறிவிக்கை' என்ற சொல்
4. அறிவிக்கையின் நோக்கம் மற்ற விவரங்கள்
5. அரசு ஆணை எண், துறை, நாள்
6. அறிவிக்கையின் பகுதி
7. ஆலுவலரின் பெயர்
8. அலுவலரின் பதவிப் பெயர்

தமிழ் நாடு அரசு

தொழிலாளர் நலன், வேலை வாய்ப்புத் துறை

அறிவிக்கை

(1948-ஆம் ஆண்டு, குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்கீழ் மரம் வெட்டும் தொழிலில் சில பணிவகைகளுக்குக் குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயித்தல் குறித்துப் பிறப்பிக்கப்படும் அறிவிக்கை)

(அரசு ஆணை எண் 1819, தொழிலாளர் நலன்-வேலை வாய்ப்பு, நாள் 17 அக்டோபர் 1972)

1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1948) 3-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (அ) பகுதியும் 5-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் அச்சட்டத்தின் 5-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (அ) பகுதியின்படி நியமிக்கப்பட்ட குழுவின் ஆலோசனைகளைப் பரிசீலித்த பிறகு மரம் வெட்டும் தொழிலில் சில பணி வகைகளுக்குக் கீழ்க்கண்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு குறைந்த அளவு ஊதிய வீதங்களை இதனால் நிர்ணயிக்கிறார்.

இந்த அறிவிக்கை 1972-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8-ஆம் நாளன்று செயலுக்கு வரும்.

விவர அட்டவணை

மரம் வெட்டும் தொழிலில் வேலை வாய்ப்பு

பணி வகைகள்	குறைந்த அளவு ஊதிய வீதங்கள்
1. பணித் தேர்ச்சி பெற்றோர்	நாள் ஒன்றுக்கு ரூ. 7.00
2. பணியில் ஓரளவு தேர்ச்சி பெற்றோர்	நாள் ஒன்றுக்கு ரூ. 5.50
3. பணித் தேர்ச்சி பெறாதவர்	நாள் ஒன்றுக்கு ரூ. 4.50

காடுகளில் மரங்களை வெட்டுதல், தண்டுகளாக வெட்டுதல், வெட்டிய மரங்களைப் பலகைகளாக அறுத்தல் ஆகிய பணிகளுக்கு, செய்யும் பணிக்கு ஏற்றவாறு, ஊதியம் கொடுக்கப்படும். பணியாளர்களுக்குக் குறைந்த அளவு உத்தரவாத ஊதிய வீதம் நாள் ஒன்றுக்கு ரூ. 4.50 ஆக இருக்கும்.

எம். எம். இராஜேந்திரன்,
அரசுச் செயலாளர்.

தமிழ்நாடு அரசு//வேளாண்மைத் துறை// அறிவிக்கை
(மணச்சநல்லூர் அங்காடிப் பகுதியையும் அதைச் சுற்றியும் 16 கிலோ மீட்டரில் உள்ள பகுதியையும் ஒழிக்கட்டளை (ரெகுலேஷன்) ஆகியவைகளிலிருந்து மணச்சநல்லூர் அங்காடியை பகுதியாக அறிவிக்கை படுகிறது.)

(அரசு ஆணை ↓ 2467, எண், வேளாண்மை, நாள் 27 டிசம்பர் 1973) அந்த அங்காடியைச்

16 கிலோமீட்டரில் தமிழ்நாடு 1959ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 5ஆவது பிரிவைச் சேர்ந்த (4) அதிகாரங்களைக் கொண்டு, தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் மேற்கண்ட வரை அட்டவணையின் (1) பகுதியில் குறிப்பிட்டுள்ள உப்பிலியம் வருவாய் மணச்சநல்லூர் அங்காடிப் பகுதியையும், (2) பகுதியில் ↑ பகுதி காண்பிக்கப்பட்டுள்ள வரிவாய்க் கிராமங்களில் அடங்கியதும் சுற்றுலும் ↓ தொலைவைக் குறிக்கும் பகுதியையும், மேலும், வேளாண்மை அதிகாரி (தொண்டு) மேற்கண்ட சட்டத்தின் நோக்கங்களுக்காக மணச்சநல்லூர் அங்காடியை அறிவிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கிறார்.

அரசு அட்டவணை

மணச்சநல்லூர் அங்காடியை ஒட்டிய பகுதி	கீழ்க்கண்ட வரிவாய்க் அடங்கியதும், அங்காடியைச் சுற்றியும் கிராமங்கள் / தொலைவாகியன பகுதி.
(1)	(2)
பரணையம்	(1) ஓமாந்தூர்
காவேரி தொலைவை அருகிலுள்ள மணச்சநல்லூர் கிராமத்தின் ரெ. அ. எ. எண் 7 (5 கி.மீ தொலைவில்)	(3) ஜீயபுரம் (5) தென்னூர்ப்பட்டி (2) திருநெடுங்குளம் (4) திருப்பராய்த்துறை (ஓமாந்தூர்)

அரசுச் செயலாளர்// வாசிக்க
டி. படாள்சாமி,



தமிழ்நாடு அரசு

உள்ளாட்சித் தேர்தல்

அறிவிக்கை

(எல்லையும் உள்ளாட்சி தன்னிய எல்லைக்குள் நடைபெறும் திருவாரூர்க்காலைத்தில் ஸ்ரீ பஞ்சவியம்மன் கோயில் வாகனங்களுக்கு கட்டணம் வசூலித்தல்) தொடர்பான

(அரசு செ.நெ. 24340/74, பி-19, நாள் 27 ஜூன் 1974)

பார்வை: (1) திருவாரூர் உள்ளாட்சி அறிவிக்கைகளின் பகுதி எல்லை

(2) திருவாரூர் உள்ளாட்சி தன்னியத்தினால் நடைபெறும் கோயில் (திருவாரூர் ஸ்ரீ பஞ்சவியம்மன் கோயில்) அறிவிக்கப்பட்ட தல அதிகாரி என்று திருப்படலாம்) அறிவிக்கப்பட்ட இடமாக 10/15 -ம் வருடம், நவம்பர் 18-ம் தேதியன்று எண் 1018-ன்படி

திருவாரூர் பஞ்சவர்க்கங்களுக்கு வாங்கப்படும் என்ன வகையான (உட் பார்க்க) பாரா 6, பஞ்சாயத்து நிர்வாக அலுவலர் பக்கம் 833, பதி 1-ன் தொடர்ச்சியாக

தேதி 1974 (X) (இரண்டு மாட்டுகளுக்கு மேற்பட்ட) பார்வை

வண்டிகளுக்கு, சரக்கு, பயணிகள் திருவாரூர் திருவாரூர் திருவாரூர் வண்டி உரிமையாளர்கள் மீது விதிக்கப்பட்ட

அதிகாரத்தினால் இந்த கட்டணம் வசூலிப்பதை நிறுத்தி வைக்கிறார்.

இட்டலவணை

விதிகள்	விகிதங்கள்
1. மோட்டார் வாகனங்கள், ஒரு கூடம்	2 – 00
2. மோட்டார் கார்	1 – 00
3. ஆட்டோ ரிக்ஷா	2 . 00
4. லாரி	0 . 50
5. லாரி	2 . 00

கோ. ஆர். தேர்தல் மேற்பார்வை அலுவலர் கையொப்பம்

4. (ஈ) அலுவல் முறை நடவடிக்கை (Official Proceedings) **வடிவம்**

1 .....
//
2 .....
//
---

3 ..... 3 .....

4 .....
.....
5 .....
.....
// ---

6 .....
.....
.....

4 .....
.....
5.....

8..... 7.....
.....
.....

1. நடவடிக்கைகள் பிறப்பிக்கும் அலுவலரின் பதவிப் பெயரும் 'நடவடிக்கைகள்' என்ற சொல்லும்.
2. "முன்னிலை" என்ற சொல்லும், அலுவலரின் பெயர், கல்வித் தகுதி மற்றும் பதவிப் பெயரும்.
3. நடவடிக்கைகளுடைய எண்ணும் நாளும்
4. பொருள்
5. பார்வை
6. நடவடிக்கைப் பகுதி
7. அலுவலரின் பதவிப் பெயர்
8. முகவரிப் பதிவுகள்

மாதிரிப்படிவம்

சிதம்பரம் கோட்டாட்சித் தலைவரின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு. கி.சு. தங்கவேலு, பி.ஏ.,
கோட்டாட்சிக் தலைவர்.

******

ஆர். சி. எண் 3567/24 நாள் 12 சூன் 1964

பொருள் : பணியாளர் – சிதம்பரம் கோட்டாட்சி அலுவலகத்தில் தற்காலிக எழுத்தர் நியமித்தல்.

பார்வை : தென்னார்க்காடு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலரின் கடித எண் 321/64–11, நாள் 9 சூன் 194.

*****

தென்னார்க்காடு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவரால் பரிந்துரைக்கப்பட்ட திரு. வ.ச. கோவிந்தசாமி என்பவர் கோட்டாட்சி அலுவலகத்தில் 12 சூன் 1964 முதல் தற்காலிக கீழ்நிலை எழுத்தரமாக நியமிக்கப்படுகிறார்.

2. இந்த நியமனம் தற்காலிகமானதென்றும், எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, எந்நேரத்திலும், எந்தவிதமான காரணங்கள் தரப்படாமலும் முடிவுறுத்தப்படும் என்றும் இவர் அறிவிக்கப்படுகிறார்.

3. தன் சொந்த ஊரிலிருந்து வேலையை ஏற்றுக்கொள்ள சிதம்பரம் வருவதற்கான பயணத்திற்காக எந்த விதமான பயணப் படியும் இவருக்குத் தரப்படமாட்டாது. தென்னார்க்காடு மாவட்டத்தில் எந்த ஊரில் வேலை செய்யவும் இவர் தயாராக இருக்க வேண்டும்.

கோட்டாட்சித் தலைவர்.

பெறுநர்
திரு. வ.ர. கோவிந்தசாமி,
12 மார்த்தாண்டம் தெரு, விழுப்புரம், தென்னார்க்காடு மாவட்டம்.

நகல்
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், தென்னார்க்காடு மாவட்டம்,
கடலூர் புதுநகர்.
அறியப்பட்டிக் கோப்பு.

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் நடவடிக்கைகள்

முன்னிலை : முனைவர் சு. நாகராசன்,
எம்.ஏ., எம்.பில்., பி.எச்.டி.,
தொ.வ. இயக்குநர்,

நா.க.எண். 7176/அ3/97-2 நாள் 21 டிச. 1998.

பொருள் : தமிழ் வளர்ச்சி இயக்கம் - தீருந்து நிலையங்கள் - தீருந்து நிலைய நடத்துநர் பணி - தீர்ப்பு கோப்பு செய்தமை -

தொகை நிர்ணயிப்பு குழுக்கள்

பார்வை : (1) 10 செப். 1998 நாளிட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடிதம் எண் 7176/அ4/97-1

(2) 21 செப். 1998 நாளிட்ட சென்னை மிதிவண்டி நிலையங்கள் (*)

பார்வை 1-இல் காணும் கடிதத்தில் தமிழ் வளர்ச்சி இயக்குநர், தீருந்து நிலையங்களைத் தொடங்கி நிர்வகிக்கும் பொறுப்பை சென்னை மிதிவண்டி நிலையங்கள் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளார். அதன்படி, தீருந்து நிலையங்களில் பணியாற்றுவதற்கு நடத்துநர் பணிக்கு 05 ஆண்டு அனுபவம் உள்ள நபர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு மாதம் ரூ. 8000/- ஊதியம் வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். ஆனால், தீருந்து நிலையங்களில் பணியாற்றுவதற்கு நடத்துநர் பணிக்கு 05 ஆண்டு அனுபவம் உள்ள நபர்கள் கிடைக்கவில்லை என்றும், அதனால் 02 ஆண்டு அனுபவம் உள்ள நபர்களை நியமிக்க அனுமதி வழங்க வேண்டும் என்றும் கோரி தீருந்து நிலையங்கள் நிறுவனம் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு கடிதம் எழுதியுள்ளது. இதனை தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஏற்றுக்கொண்டு, தீருந்து நிலையங்கள் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

(*) தீருந்து நிலையத்தின் கடிதம் எண் 7566/97.

த.வ.கி.

பெறுநர்
மேலாளர், தீருந்து நிலையம்,
7வது அண்ணா சாலை, சென்னை 600 002.

நகல்
கும்பாக்/சண்முகி அழகுவேலர், சென்னை 600 001.

தென்கை - அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆட்சித்

நடவடிக்கைகள்

சே. முன்னிலை: திரு. த. அபிஷேக், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்.

ஆர்.தி.எண் 241/88 நாள் 14 ஆக. 1988.

பொ.: பணியாளர் - தென்கை - அண்ணா
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில்
தற்காலிக சுருக்கெழுத்தாளர்களாக நியமித்தல்.

ப.ா.: தென்கை - அண்ணா மாவட்ட வேலை வாய்ப்பு
அலுவலரின் கடித எண் 8342/88 - அ1,
நாள் 15 ஆக. 1988.

தென்கை - அண்ணா மாவட்ட வேலை வாய்ப்பு
வ.க அலுவலரால் பரிந்துரைக்கப்பட்ட திரு. இ. கோபிநாத்
இ.க மற்றும் செல்வி த. கனிமொழி ஆகியோர் மா. ஆ. தலைவர்
வ.க அலுவலகத்தில் 1 செப். 1988. முதல் தற்காலிக
சுருக்கெழுத்தாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். //2.
இந்த நியமனம் நிரந்தர மானதல்ல என்றும், எந்தநேரத்திலும்
இசை காரணம் தெரிவிக்காமல் வேலையிலிருந்து நீக்கப்படலாம்
என்றும் தெரிவிக்கப்படுகிறது. அதனால், திறமையாகப்
சே பணியாற்றுவதைப் பொறுத்தும், வேலையின் தேவையைப்
பொறுத்தும், வேலையில் அவர்கள் நீட்டிக்கப்படலாம் என்றும்
அறிவிக்கப்படுகிறது.

சே. 3. தன் சொந்த உறுதியிலிருந்து வேலையை நிறுத்திக்
கொள்வதற்கு காஞ்சிபுரம் உயிலதற்காக ஒக

இந்த இலவச பயணப் படியும் இவர்களுக்கு

மறுக்கப்படமாட்டாது என்றும், செங்கை - அண்ணா

மாவட்டத்தில் எந்த ஊரிலும் பணியாற்றத்

தயாராக இருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்

படுகிறது.

மா. ஆ. த.

பெ.

வேத திரு. தி. கோவிந்தன், 10 காமராசர் தெரு,
செங்கற்பட்டு 603 001.

வி. க. செல்வி. த. கனிமொழி, மணிவாசகம் சாலை,
திருவெள்ளூர் 602 001.

நகல்:

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், செங்கை -
அண்ணா மாவட்டம், காஞ்சிபுரம். 631 501.

நாகர் கோயில் மாவட்ட வன அலுவலரிற்கு 4ன்

நடவடிக்கைகள்

பின்னிலை : திருமதி. ஆ. திலகவதி, இ.வ.ப.
மாவட்ட தின அலுவலர் 4வ

3ம் ஆண் சி.எண் 378/88 நாள் 15 செ. 1988.

பி.1 ப.ம. : நாகர் கோயில் மாவட்ட வேலை வாய்ப்புகள் அலுவலரின் கடிதம் எண் 332/88-1. நாள் 15 செ. 1988 — நீ

ம. : பணியாளர் தொகுதி - மாவட்ட வன அலுவலர் அலுவலகம் - நாகர் கோயில் - தற்காலிக வனப் பணியாளர் - நியமித்தல் பொருள்.

இவ்வலுவலகத்தின் வேண்டுகோளுக்கிணங்க இணைத்த நாகர் கோயில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலரால் பரிந்துரைக்கப் பெற்ற பத்து பதிவுதாரர்களில் நீ. செல்வன் ஆ. பார்த்திபன் எல்லோர் நாகர் கோயில் வன மாவட்ட அலுவலரால் வனப் பணியாளராகத்

4க தற்காலிகமாகத் தேர்வு செய்யப்படுகிறார். //2 இந்நியமன தற்காலிகமானதென்றும், எந்த 4 நேரத்திலும், எவ்வித முன் அறிவிப்புமின்றி பணியினின்று விலக்கப் பெறலாம் என்றும் தெரிவு செய்யப் 4ர் பெற்றுள்ளமை தெரிவிக்கப்படுகிறது. //3. இவர்

தொடரும்

தொடர்ச்சி...

பணியில் சேர நேரில் செல்லும்போது,

கல்விச் சான்றிதழ், வயது மற்றும் இருப்பிட, முன்னுரிமை ஆகியவற்றுக்கான சான்றிதழ்களையும் கொண்டு வந்து மாவட்ட கல்வி அலுவலரிடம் காண்பிக்க வேண்டும். அவரது அறிவுரையின்படி உரிய அரசு விதிமுறைகளும் பதிவுகளும் கிடைப்பதற்கான பட்ட மேற்படிப்பு பிரிவுக்கான ஆணையை பெற்று பணியில் சேர்ந்து கொள்ள வேண்டும்.

மாவ. வ. அ.

பெ.

செல்வி ஆ. பார்த்திபன்,
3 பிரதான வீதி, மார்த்தாண்டம் 629165.
கன்னியாகுமரி மாவட்டம்.

நகல்:

மா. வே. அ.,
நாகர்கோயில் 629001.

கீழ்கண்ட அலுவலர்களை நடவடிக்கைகளைத் தக்க வகையில்
தட்டச்சு செய்க.

சென்னை, வணிக வரிகள் ஆணையரின்
நடவடிக்கைகள்

முன்னிலை : திரு. சாந்தமணி, கி.ஆ.ப., (சுப்பி)
ஆணையர், வணிக வரிகள்.

ரக ஆ.க.தி.எண் 2916/94 நாள் 18 ஜூலை 1997.

பொ: பணியாளர் - திருப்புரம், உதவி வணிக
வரி அலுவலர் திரு. து. கிராகவன் -
கிராயபுரம் கோட்டத்திற்கு மாறுதல் -
ஆணையிடப்படுகிறது.

பா: அலுவலரின் மனு, நாள் 8 ஆக. 1997. ரக

பார்வையில் குறிப்பிட்டுள்ள மனுவில், தற்போது திருவாரூர்
கோட்டத்தில் உதவி வணிகவரி அலுவலராகப் / பணிக்க
பணியாற்றிவரும் திரு. ப. கிராகவன், சென்னையிலுள்ள தனது
ரக நாள்தி குடும்ப அவசரம் பாதிக்கப்பட்டிருப்பதால், அவரை அவசியமின்று
ரக கவனிப்பதற்கு வசதியாக, தனக்கு சென்னை, கிராயபுரம்
/ மீ கோட்டத்தில் கிடைப்பது காலியாகவுள்ள பணியிடத்திற்கு மாறுதல்
ஆணைகள் வழங்கிடுமாறு கேட்டுள்ளார். // 2. அவரது மனுவைக்
ரக நி கனிவுடன் பரிசீலித்ததில், கூறப்பட்டுள்ள காரணம் ஏற்புடையதென
அறியப்படுவதால், உடனடியாக அலுவலர் மேற்படி கிராயபுரம்
கோட்டத்திற்கு மாற்றப்படுகிறார். // 3 விருப்புரம் கோட்ட கிளை
ஆணையர், அவரை உடனடியாகப் பணிவிடுவித்து விடுவிக்குமாறு
கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

ஆணையர்.

பெறுநர்
திரு. ப. கிராகவன்,
உதவி வணிகவரி அலுவலர்,
விருப்புரம். 606 601.

நகல்.
கிளை ஆணையர், வணிக வரிகள், விருப்புரம் 606 601.

பகுதி – இ

I. தட்டெழுத்து – செய்முறை பயிற்சி – I

மெக்கானிசம்

தட்டச்சுப் பொறியின் வரலாறு : திரு. ஹென்றி மில் என்பவரால் 1714 ஆம் ஆண்டு ஆங்கில தட்டச்சு பொறி கண்டுபிடிக்கப்பட்டது. திரு. முத்தையா என்பவரால் 1936 ஆம் ஆண்டு தமிழ் தட்டச்சு பொறி வடிவமைக்கப்பட்டது.



1. தாள் வழிகாட்டி (Paper Guide)
2. ஓரக்கட்டு அளவுகோல் (Marginal Scale)
3. இடது ஓர நிறுத்தி (Left Marginal Stop)
4. வலது ஓர நிறுத்தி (Right Marginal Stop)
5. அழிப்பான் பயன்படுத்தும் தகடு (Erasure Tabl
6. மேல்மட்டத் தாள் பிடிப்பான் (Overhead paper Bail)
7. அட்டை பிடிப்புகள் (Card Holders)
8. தாளை விடுவிக்கும் நெம்பு கோல் (Paper Release Lever)
9. உருளைத் தாங்கியை விடுவிக்கும் நெம்பு கோல் (Carriage Release Lever)
10. பின் தள்ளும் விசை நெம்பு கோல் (Back Spase Key)
11. உருளைச் சுழற்றி வலது (Thumb wheel)
12. உருளைச் சுழற்றி இடது (Thumb wheel)
13. நாடா நிறம் காட்டி (Ribbon Colour Selector)
14. வரி விட்டு உருளைத்தாங்கியைத் திருப்பும் நெம்புகோல் (Carriage Return & Line Space Lever)
15. மாற்று விசை (Shift Key)
16. மாற்று விசைப் பூட்டு (Shift Lock)
17. இடம் விடும் சட்டம் (Space Bar)
18. அட்டவணை அமைக்கும் விசை (Tabulator Set Key)
19. அட்டவணை மாற்றம் / எடுக்கும் விசை (Tabulator Clear Key)
20. அட்டவணை விசை (Tabulator Bar)
21. தேவைக்கேற்ப வரி இடைவெளி அமைப்பான் (Variable Line Spacer)
22. வரி இடைவெளியை முறைப்படுத்தும் அளவு கோல் (Line Space Selector)
23. விடுபிடி உருளை விடுவிப்பான் (Detent Release Lever)
24. ஓர விடுப்பான் (Marginal Release Key)
25. முன்னரே அமைக்கப்பட்ட அட்டவணை விசை (Pre - set Tabulator Selector)

தட்டச்சு பொறியின் வகைகள்:

1 2



தட்டச்சு பொறிகள் இரண்டு வகையாக உள்ளன.

(1) நிலையாக வைத்துக் கொள்வது. (Standard)

(2) எளிதில் எடுத்துச்செல்லத்தக்கது (Portable)

பயன்கள்:

- ஸ்டாண்டர்டு தட்டச்சு பொறிகள் அலுவலகங்களில் நிலையாக வைத்துக் கொள்ளப்பயன்படுகிறது.
- முகாம் செல்லும் போதும், பயணங்களின் போதும் எளிதில் எடுத்துச்செல்ல போர்டபுல் தட்டச்சு பொறி பயன்படுகிறது.
- 1958 ஆம் ஆண்டு தமிழ் தட்டச்சு விசை பலகை அரசினரால் அங்கீகரிக்கப்பட்டது.
- தயாரிப்பு மற்றும் வரிசை எண் முதலியவை கொண்டு தட்டச்ச பொறியை அடையாளம் கண்டு கொள்ளளாம்.

வினாக்கள்:

1. தமிழ் தட்டச்சு பொறி யாரால் வடிவமைக்கப்பட்டது ? எந்த வருடம் ?
2. தட்டச்சு பொறி எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
3. போர்டபுல் தட்டச்சு பொறி எப்பொழுது பயன்படுகிறது ?
4. தமிழ் தட்டச்சு விசை பலகை எந்த வருடம் அரசினரால் அங்கீகரிக்கப்பட்டது ?
5. உன் தட்டச்சு பொறியை எப்படி அடையாளம் காணுவாய் ?

உருளைத்தாங்கி: (Carriage)

1. வரி விட்டு உருளைத் தாங்கியைத் திருப்பும் நெம்புகோல்
2. வரி இடைவெளிக் கொக்கி
3. வரி இடைவெளி அமைக்கும் சாதனம்
4. வரி இடைவெளி குறியீடு
5. (இடது) உருளை சுழற்றி
6. தேவைக்கேற்ப இடைவெளி அமைக்கும் சாதனம்
7. தாள் பாதுகாக்கும் சாதனம்



உருளைத்தாங்கி என்பது தட்டச்சு பதிவுகளை பெறுவதற்கு தட்டச்சு பொறியின் முக்கிய பாகமாகும். எழுத்தச்சு பதிவு ஏற்படுவதற்கு இதில் உள்ள பல உறுப்புகள் உதவியாக உள்ளன. இது இரு புறமும் இயங்கக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. உருளைச்சுற்றி அல்லது வரி விட்டு உருளைத்தாங்கிய திருப்பும் நெம்புகோலை பயன்படுத்தி உருளைத்தாங்கியை வலது புறம் நகரச்செய்யலாம். எழுத்து விசை இடம் விடும் சட்டம் அட்டவணை வரிசை அல்லது உருளைத்தாங்கியை விடுவிக்கும் நெம்புகோலை இயக்கும் போது உருளைத்தாங்கி இடது புறம் படிப்படியாக நகர்கிறது. அட்டவணை விசை அல்லது உருளைத்தாங்கியை விடுவிக்கும் நெம்புகோலை இயக்கும் போது உருளைத்தாங்கி இடது புறம் வேகமாக நகர்கிறது.

உருளைத்தாங்கியை எழுத்துபதிவுடன் இடது புறம் கொண்டுவர எழுத்து விசைகளை பயன்படுத்த வேண்டும்.

வினாக்கள்:

1. உருளைத்தாங்கியின் படிப்படியான இடதுபுற இயக்கம் ஏற்பட எதை இயக்க வேண்டும் ?
2. எந்த விசையை அழுத்தினால் உருளைத்தாங்கி இடது புறம் வேகமாக நகரும் ?
3. எதை இயக்கினால் உருளைத்தாங்கி இடதுபுறம் எத்தனை இடைவெளி நகரும் ?
4. எதைப்பயன்படுத்தி உருளைத்தாங்கியை வலதுபுறம் நகரச் செய்யலாம் ?

உருளை: இது கடினமான ரப்பரால் செய்யப்பட்டது. உருளையில் மூன்று வகைகள் உண்டு.

1. கடினம், 2. மிருது, 3. நடுத்தரம்.

- கடினத்தன்மை வாய்ந்த உருளைகளை உபயோகப்படுத்தினால் எழுத்து முகங்கள் தேய்வடையும். நகல் பெருக்கித் தாளில் தட்டச்சு செய்வதற்கும் அதிக நகல்கள் எடுப்பதற்கும் கடினத்தன்மை வாய்ந்த உருளைகள் உபயோகப்படுத்தப்படுகிறது.
- மிருதுவான உருளைகளை உபயோகப்படுத்தினால் உருளைகள் விரைவில் தேய்வடையும்.
- நடுத்தர தன்மை வாய்ந்த உருளைகளே பெரிதும் அலுவலகங்கள் தட்டடெழுத்து பள்ளி போன்றவற்றில் உபயோகப்படுத்தப்படுகின்றன.
- உருளையின் அமைப்பு உருண்டையாக உள்ளதால் தாள்களை சுலபமாக சுழற்ற பயன்படுகிறது. எழுத்தச்சு முகத்தில் இரண்டு எழுத்துக்கள் இருந்தும் ஒரு சமயத்தில் மேல் வரிசை அல்லது கீழ் வரிசை எழத்து பதிவினை மட்டும் பெறுவதற்கு உருளை உதவுகிறது.
- உருளை பழுதடையாமல் இருக்க வேண்டுமானால் :

  1. அடித்தாள் வைத்தே எப்பொழுதும் தட்டச்சு செய்ய வேண்டும்.
  2. குறைந்த அழுத்த திறனுடன் தட்டச்சு செய்ய வேண்டும்.

வினாக்கள்:

1. உருளை எவற்றால் செய்யப்பட்டுள்ளது ? எத்தனை வகைப்படும்
2. கடினத்தன்மை வாய்ந்த உருளையை எப்பொழுது பயன்படுத்துகிறார்கள் ?
3. எழுத்தச்சு முகத்தில் இரண்டு எழுத்துக்கள் இருந்தும் ஒரு சமயத்தில் ஒரு எழுத்து பதிவினை மட்டும் எப்படி பெறுகிறோம்.
4. நடுத்தர தன்மை வாய்ந்த உருளைகளை எங்கு பயன்படுத்தப்படுகிறது ?

உருளைச்சுழற்றிகள் (Thumb wheels) : இரண்டு உருளைச்சுற்றிகள் தட்டச்சு பொறியில் உள்ளன. அவை தம்ப்வீல்ஸ் அல்லது பிலோடல் நாப்ஸ் அல்லது சிலிண்டர் நாப்ஸ் என்று ஆங்கிலத்தில் கூறுவர். தாளை உள்ளே நுழைப்பதற்கும் வெளியே எடுப்பதற்கும் உருளையை மேல் நோக்கியோ அல்லது கீழ் நோக்கியோ இரு திசைகளிலும் சுழற்றுவதற்கும் உருளை சுழற்றிகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. வரிவிட்டு உருளைத்தாங்கியை திருப்பும் நெம்புக்கோல் செயல்படாமல் போனால் உருளைச்சுழற்றியை பயன்படுத்தி அடுத்த வரியை பெறலாம்.

வினாக்கள்:

1. எத்தனை உருளைச் சுற்றிகள் உள்ளன ?
2. உருளைச் சுற்றிகளின் ஆங்கில வேறு பெயர்கள் யாவை ?
3. எதைப் பயன்படுத்தி கீழ்நோக்கியோ அல்லது மேல்நோக்கியோ சுழற்றலாம் ?
4. உருளைச் சுற்றிகளின் இரண்டு பயன்களைக் கூறு ?

இழுவை நாடா (Draw Cord) : ஆங்கிலத்தில் 'டிராக்கார்ட்' என்றும் 'டிராபாண்டு' அழைப்பர். இழுவை நாடாவின் ஒரு முனை உருளைத்தாங்கியுடனும் மறுமுனை வில்விசை தொட்டியுடனும் பொறுத்தப்பட்டுள்ளது. உருளைத்தாங்கி இழுவிசை அல்லது வில்விசை இழுவிசை இழுவைநாடாவின் மூலமாக உருளைத்தாங்கிக்கு கொண்டுசெல்லப்படுகிறது. இழுவை நாடா வில்விசை சக்தியினால் இடதுபுறம் இழுக்கப்படுவதால் உருளைத்தாங்கி இடதுபுறம் நகர்கிறது. இழுவைநாடா அவசரமாக தட்டச்சு செய்ய வேண்டிய நிலையில் அருந்துவிட்டால், தட்டச்சு பொறியை வலதுபுறம் சிறிது உயர்த்தி வைத்து தட்டச்சு செய்தால், இடம் விடும் சட்டம் அல்லது எழுத்து விசையை இயக்கினால் உருளைத்தாங்கி, பலுவின் காரணமாக இடதுபுறம் நகரும்.

வினாக்கள்:

1. இழுவை நாடாவின் இரு முனைகளும் எங்கு இணைக்கப்பட்டுள்ளன ?
2. இழுவை நாடாவின் மறு பெயர்கள் யாவை ?
3. எந்த சக்தியினால் இழுவைநாடாவானது இடதுபுறம் இழுக்கப்பட்டு எப்படி நகரும் ?
4. இழுவைநாடா தட்டச்சு செய்யும்போது அறுந்துவிட்டால் எப்படி செய்வாய் ?
5. எதை வில்விசை சக்தி என்று குறிப்பிடப்படுகிறது ?

வில்விசை (Main Spring) : வில்விசை பொதுவாக தட்டச்சுபொறியின் இடதுபுறத்தில் அமைந்துள்ளது. இதன் காரணமாக உருளைத்தாங்கி இடதுபுறம் நகர்கிறது. ஆனால் உருதுமொழி எழுதப்படும்பொழுது வலது புறத்திலிருந்து இடதுபுறமாக எழுதப்படுவதால் உருது மொழி தட்டச்சு பொறிகளில் வில்விசை வலது புறத்தில் பொறுத்தப்பட்டுள்ளது.